
# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** **51**

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

## வகுப்புரிமை வழக்கறிஞர் வ.உ.சி.!



**நா**ட்டு விடுதலைக்காகக் கப்பலோட்டி சிறை சென்று, 'செக்கிழுத்த செம்மல்' என்று வ.உ.சிதம்பரனாருக்குப் பெருமையுண்டு. அதில் பொய்யுமில்லை. மிகையுமில்லை. முழு உண்மை. நாட்டு விடுதலைக்காக அனைத்தையும் இழந்த வ.உ.சிக்கு, இன்னொரு பெருமை உண்டு. அது வகுப்புரிமையை ஓங்கி ஒலித்த உரிமைக்குரலுக்குச் சொந்தக்காரர் என்ற பெருமை. 'வ.உ.சி என்றால் உரிமைக்காக வாதாடிச் சிறை புகுந்த வழக்கறிஞர்' என்றார் கலைஞர் கருணாநிதி. அதைச் சிறிது மாற்றி, வகுப்புரிமைக்காக வாதாடிய வழக்கறிஞர் வ.உ.சி என்றாலும், அதிலும் மிகையுமில்லை. பொய்யுமில்லை.

வ.உ.சி.யின் வாழ்க்கையை இரண்டாகப் பிரித்தால், 1904 முதல் 1912-ஆம் ஆண்டு வரையிலான காலத்தை, நாட்டு விடுதலைக்காகவும், 1918 முதல் 1936-ஆம் ஆண்டு வரையிலான காலத்தை வகுப்புரிமைக்காகவும் செலவிட்டவர் எனலாம்.

பிட்டி தியாகராயர், டாக்டர் நாயர், நடேசனார் ஆகியோர் இணைந்து தொடங்கிய 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' சென்னை மாகாணத்தை பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என இரண்டாகப் பிளந்து போட்டிருந்தது. பார்ப்பனரல்லாதார் வகுப்புரிமையை முதன்மைக் கோரிக்கையாக முன்வைத்து அசராமல் களமாடியது. அசுரர்களை (பார்ப்பனரல்லாதவர்கள்) ஆரிய மேன்மை பாராட்டிய பார்ப்பனர்களுக்கு எதிராக ஒன்று திரட்டியது. வேறு வழியின்றி, காங்கிரஸ் கட்சி, தங்களிடமிருந்த பார்ப்பனரல்லாதவர்களை ஒன்றுதிரட்டி, சென்னை மாகாணச் சங்கத்தைத் தோற்றுவித்தது.

அதில் சுதந்திரப் போராட்டத் தியாகி வ.உ.சி., தமிழ்த்தென்றல் திரு.வி.க., தந்தை பெரியார், டாக்டர் வரதராஜுலு ஆகியோர் இணைந்து இயங்கினார்கள்.

பார்ப்பனரல்லாதாரின் மக்கள்தொகைக்கு ஏற்ப, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்பது 'நீதிக்கட்சி'யின் கொள்கை. அக்கோரிக்கையை முன்வைத்து, நீதிக்கட்சி சென்னை மாகாணமெங்கும் மாநாடுகளை நடத்தியது. நீதிக்கட்சியின் போட்டி இயக்கமான 'சென்னை மாகாண சங்கமும்' பார்ப்பனரல்லாத மக்களுக்கு வகுப்புரிமை கோரியது. 1920-இல் திருநெல்வேலியில் நடந்த 26-வது சென்னை மாகாண அரசியல் மாநாட்டில் வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அத்தீர்மானத்தை, பெரியார் முன்மொழிந்தார். வ.உ.சி.யும் தண்டபாணியும் வழிமொழிந்தனர். அந்தக் கூட்டத்தில் இருந்த பார்ப்பனர்கள் தந்திரமாகச் செயல்பட்டு, 'விகிதாச்சாரம்' (PERCENTAGE) என்கிற சொல்லுக்குப் பதிலாக 'போதுமான' என்னும் பொருள் கொடுக்கும் (ADEQUATELY) என்கிற சொல்லைப் போட்டுக் கொள்ளும்படியான திருத்தத்துடன் தீர்மானம் நிறைவேற்றினர்.

'ADEQUATELY' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் என்னவென்று பெரியார், அம்மாநாட்டுக்குத் தலைவராக இருந்த சீனிவாசய்யங்கார் அவர்களைக் கேட்க, அவர் இரண்டும் ஒன்றுதான். ஆனால், பர்சன்டேஜ் என்பதை விட, 'அடிகுவேட்லி' என்பது நல்ல சொல்லென்று கூறித் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்.

அம்மாநாடு முடிந்ததும் வெளியில் வந்த தந்தை பெரியார், ஆங்கிலம் படித்த சிலரிடம் 'அடிகுவேட்லி' என்பதற்கும் 'பர்செண்டேஜ்' என்பதற்கும் என்ன வேறுபாடு என்று கேட்டபோது, அவர்கள், 'அடிகுவேட்லி' என்பது இருபொருள் கொண்டதென்றும், அதாவது 'தகுதிக்கு ஏற்ற' என்கிற பொருள்கூட கொள்ளலாமென்றும், 'பர்சன்டேஜ்' என்கிற வார்த்தைதான் மிகத் தெளிவானது என்றும் சொன்னார்கள்.

அதன்பிறகு, 'பர்சன்டேஜ்' என்கிற சொல்லையே போட்டுக்கொள்ள வேண்டும் என்று தந்தை பெரியாரும், தண்டபாணி பிள்ளையும் தலைவர் சீனிவாசய்யங்காரிடம் சொன்னார்கள். அவரும் ஒப்புக் கொண்டார். இருப்பினும், ஒப்புக்கொண்டபடி தீர்மானத்தை மாற்றவில்லை என்று 'குடி அரசு' (6.12.1925) இதழ் பதிவு செய்துள்ளது. பார்ப்பனர்கள் தம்மை ஏமாற்றியதாக தந்தை பெரியாரும் வ.உ.சியும் உணர்ந்தனர். அதன்பின்னரும் பார்ப்பனரல்லாதாரின் வகுப்புரிமை குறித்து, மிகுந்த தெளிவுடன் வ.உ.சி இருந்து வந்துள்ளார்.

1928-இல் பெரியார் வெளியிட்ட 'ஞான சூரியன்' என்னும் நூலுக்குச் சிறப்புரை எழுதிய வ.உ.சி, பார்ப்பனரல்லாதார் நிலை குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> **"திராவிடர் கழகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு வ.உ.சி.யாகவே இருந்து, புரட்சி செய்து மாள்வதையே பெரும் பேறாகக் கொள்வர். நாமும் வ.உ.சி.யாக மாறுவோமாக!!!"**

"பிராமணப் புரோகிதர்களும் பூசாரிகளும் பிராமணரல்லாதாருடைய பொருள்களைக் கவருவதற்குத் தொன்றுதொட்டுச் செய்து வரும் சூழ்ச்சிகளையும் மோசங்களையும் கொலைகளையும் எடுத்துக்கூறிப் பிராமணரல்லாதவர்கள் இன்னும் பிராமணப் புரோகிதர்களையும் பூசாரிகளையும் விரும்புகிறார்களா என 'ஞானசூரியன்' வினவுகிறான். இந்து சமயம் என்பதன் பொய்களையும் புரட்டுகளையும் ஆபாசங்களையும் அச்சமயத்தின் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாகவும் பிராமணரல்லாதாரின் பொருள்கள் கொள்ளையிடப்படுவதையும் பிராமணரல்லாதார் தாழ்த்தப்படுவதையும் அக்கொள்ளைகளின்றும் தாழ்வினின்றும் பிராமணரல்லாதார் தப்புவதற்குரிய அவசியத்தையும் வழிகளையும் ஞானசூரியன் நன்கு விளக்குகின்றான்."

5.11.1927 அன்று சேலத்தில் நடந்த காங்கிரஸ் கட்சியின் மூன்றாவது அரசியல் மாநாட்டிற்குத் தலைவராக வ.உ.சி. அழைக்கப்பட்டார். அம்மாநாட்டில் அவர் நிகழ்த்திய தலைமை உரையில், 'வகுப்புவாரி உரிமையின்றி நாட்டில் ஒற்றுமை உண்டாகாது' என்று பின்வருமாறு கூறினார்:

"இராஜாங்க உத்தியோகங்களும் ஸ்தல ஸ்தாபன உத்தியோகங்களும் பொது ஸ்தாபன உத்தியோகங்களும் நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாருக்கும் அந்தந்த ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து கொடுக்கப்பட்டாலன்றி, நம் தேசத்தாருள் ஒற்றுமை உண்டாகப் போவதேயில்லை என்பதும், நமக்குள் ஒற்றுமையுண்டாகாமல், நாம் உண்மையான சுய அரசாட்சி அடையப் போவதே இல்லை என்பதும், மனித அறிவுடைய எவருக்கும் தெளிவாக விளங்கத்தக்கவை. இவ்வுண்மைக்கு மாறாகப் பேசுகின்றவர் யாவராயினும் மனித அறிவில்லாதாவர்."

அதே உரையில், "நமது தேசத்தில் நிலவும் பிறப்பை ஆதாரமாகக் கொண்ட அநியாயமான ஜாதி வேற்றுமைகளையும், உயர்வு தாழ்வுகளையும் கடுமையாக நான் எதிர்க்கிறேன். நம் நாட்டு மக்களிடம் ஒற்றுமை ஏற்படாமல் போனதற்குக் காரணம், அரசுப் பணிகளிலும் சட்டசபைகளிலும் பொது நிறுவனங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்படாததுதான் என்றும், வகுப்புவாரி உரிமை வழங்குவதே உண்மைத் தேசாபிமானி ஒவ்வொருவரது கடமையாகும்" என்றும் வகுப்புரிமையின் முக்கியத்துவத்தை வ.உ.சி வலியுறுத்திப் பேசினார்.

முகமதியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள், தாழ்த்துகின்ற ஹிந்துக்கள் என்னும் நான்கு வகுப்பினர்களைப் பிராமணரல்லாதார் என்று, வ.உ.சி. வரையறுத்தார். பார்ப்பனரல்லாதாரின் வகுப்புரிமையை முன்வைத்த வ.உ.சியின் கொள்கைகளை, காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அவர் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி, பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துடன் இணக்கமாகச் செயல்பட்டார். 1936-இல் இறக்கும் வரை வகுப்புரிமைக்காக குரல் கொடுத்து வந்தார். அதை காங்கிரசார் விரும்பவில்லை. நாட்டுக்காகத் தன்னைத் தியாகம் செய்திருந்தாலும், பார்ப்பனரல்லாதார் நலனில் அவர் கொண்டிருந்த தீவிரத்தன்மைக்காக, புறக்கணிப்புக்கு உள்ளானார்.

வ.உ.சி. இறந்த போது, 22.11.1936 அன்று பெரியார் குடியரசில் எழுதிய இரங்கல் உரையில் வ.உ.சி. புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்ட விதத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"தோழர் சிதம்பரம் ஒரு பார்ப்பனராய் இருந்திருப்பாரானால் - லோகமானியர், முனீந்திரர், சிதம்பரம் கட்டடம், சிதம்பரம் உருவச்சிலை, சிதம்பரநாதர் கோயில், சிதம்பரம் பண்டு, காங்கிரஸ் மண்டபங்களில் காங்கிரஸ் பக்தர் வீடுகளில் சிதம்பரம் கழுத்துச் சிலை, சிதம்பரம் உருவப்படம் இருக்கும்படியான நிலையை அடைந்திருப்பார். ஆனால், அவர் பிள்ளை, அதுவும் சைவப் பிள்ளையானாலும், சூத்திரப்பிள்ளை ஆனதால், அவர் வாழ்வு அவருக்கே அவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்காமல் இருந்தது என்பதோடு, அவருக்காக ஏற்படுத்தப்பட்ட பண்டுகூட வெளியிட யோக்கியதை இல்லாததாய் இருந்து வருகிறது."

இன்னும் நீண்டநாள் வ.உ.சி. வாழ்ந்திருந்தால், அவர் எவ்வாறு இருந்திருப்பார் என்பதை, 'விடுதலை' ஏட்டில் 20.11.1947 அன்று வெளியான தலையங்கம் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது:

"இந்நாளில் வ.உ.சி. இருந்தால், நம் கட்சியில்தான் இருப்பார் என்று கூறுவது மட்டுமல்ல, தலைமை வகித்தும் நடத்துவார். ஆரியம் இந்நாள் கப்பலேறியிருக்கும், அவர் கப்பலோட்டியாதலால். திராவிடர் கழகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு வ.உ.சி. யாகவே இருந்து, புரட்சி செய்து மாள்வதையே பெரும் பேறாகக் கொள்வர்."

நாமும் வ.உ.சி.யாக மாறுவோமாக!!!

**...குரல் ஒலிக்கும்**

### 'திராவிடம்' அன்றும்- இன்றும்- என்றும்!



இந்திய சமூக ஆய்வு நடுவம், திராவிட இயக்க ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம் இணைந்து, 'திராவிடம் அன்றும்- இன்றும்- என்றும்' இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் மார்ச் 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு 'பன்முகப் பார்வையில் திராவிட இயக்க வரலாறு, சிந்தனைகள், சாதனைகள்' என்ற தலைப்பில், ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. மாணவர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பலாம்.

ஆர்வமுள்ளவர்கள் மார்ச் 5-ஆம் தேதிக்குள், ஆய்வுச்சுருக்கத்தை அனுப்ப வேண்டும். ஆய்வுக் கட்டுரையை அனுப்ப, மார்ச் 20-ஆம் தேதி கடைசி நாளாகும். ஆய்வுச்சுருக்கம் 250 சொற்கள் என்ற அளவிலும், ஆய்வுக்கட்டுரைகள் 5,000 சொற்கள் என்ற அளவிலும் இருக்கவேண்டும். யூனிகோடு வடிவில் மட்டுமே அனுப்ப வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நூல்களாக வெளியிடப்படவுள்ளன. கருத்தரங்கப் பதிவுக்கட்டணமாக மாணவர்களுக்கு 500 ரூபாயும், ஆய்வாளர்களுக்கு 750 ரூபாயும், பேராசிரியர்களுக்கு 1,250 ரூபாயும், வல்லுநர்களுக்கு 1,500 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

cissfoundation.org@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்குக் கட்டுரைகளை அனுப்பலாம்.

### :.ப்ளாஷ்பேக்



என்.கிருஷ்ணன்



#### தலைவரிடம் ஆசி பெற்றேன்!

2012-ஆம் ஆண்டில் இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர் நேர்காணலில் பங்கேற்க, சென்னை வந்திருந்தேன். அப்போது என் நீண்ட நாள் கனவான கழகத் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, அவரிடம் ஆசி பெற வேண்டும் என விரும்பினேன். நல்வாய்ப்பாக, இளைஞர் அணி நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இன்றைய கழகத் தலைவர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்களும் கோபாலபுரம் வந்திருந்தார். அப்போது அன்றைய மாவட்டச் செயலாளர் அண்ணன் டி.பிரகாஷ் அவர்களும் உடன் இருந்தது, எனக்கு மகிழ்ச்சியை அளித்தது.

**– என்.கிருஷ்ணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர், கிருஷ்ணகிரி மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### உழவர் சந்தைகள்!

1999-ஆம் ஆண்டு, நவம்பர் 14-ஆம் தேதியன்று, தமிழ்நாட்டில் முதலாவது உழவர் சந்தையை, மதுரையில் தொடங்கிவைத்தார் கலைஞர். காய்கறிகளை உற்பத்தி செய்த விவசாயிகள், இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்ய, இந்தச் சந்தை வழியமைத்துக் கொடுத்தது. ஓராண்டுக்குள் 100 உழவர் சந்தைகள் அமைக்க வேண்டும் என இலக்கு வைத்து, 2000-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 100-வது உழவர் சந்தையினைத் தொடங்கிவைத்தார் கலைஞர்.

### திராவிடத்தால் வாழ்கிறோம்

**761**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131